**<u>நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்</u>**

**<u>முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,</u>**

**<u>நீதித்துறை நடுவர் எண்.2 , திண்டுக்கல்</u>**

**<u>2026ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் திங்கள்கிழமை</u>**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 128/2015**

**<u>CNR.No. TNDG03-001052-2015</u>**

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
நகர் வடக்கு காவல் நிலையம், திண்டுக்கல்,
குற்ற எண். 778/2014
சட்டப்பிரிவுகள் 52(A) r/w 68(A), 506(i) IPC

... குற்ற முறையிடுபவர்

/எதிர்/

1) சின்னு @ சின்னச்சாமி (வயது 37/2014)
த/பெ. ராமு @ ராமசாமி,
85C, ஸ்பெண்சர் காம்பவுண்ட்,
நாகல் நகர், திண்டுக்கல்.

2) கோபாலகிருஷ்ணன் (வயது 23/2014)
த/பெ.கணேசன்,
14, அபிராமி நகர், சிலுவத்தூர் ரோடு,
திண்டுக்கல். ... எதிரிகள்

**<u>Case – Summary</u>**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.128 of 2015 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by<br>Sub Inspector of Police, Town North PS. Dindigul in Cr.No.778/2014 |

<table>
<tr><td>3.</td><td>Name of the accused</td><td colspan="3">A1) Chinnu @ Chinnasamy<br>A2) Gopalakrishanan</td></tr>
<tr><td>4.</td><td>Father’s Name</td><td colspan="3">A1) Ramu @ Ramasamy<br>A2) Ganesan</td></tr>
<tr><td>5.</td><td>Occupation</td><td colspan="3">-</td></tr>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">A1) 85C, Spencer Compound, Nagal Nagar, Dindigul.<br><br>A2) 14, Abirami Nagar, Siluvathur Road, Dindigul.</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">A1) 37/2014<br>A2) 23/2014</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">14.12.2014 at about 19.30 hours</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">14.12.2014<br>26.02.2015</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">Accused were arrested and remanded on 14.12.2014</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">17.12.2014 (A1-A2)</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s.207 Cr.P.C.</td><td colspan="3">30.03.2015</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 06.04.2015 the accused were questioned on substance of accusation U/s. 52(A) r/w 68(A) of Copy right Act and 506(i) of IPC. Accused denied the case as false and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="3">15</td><td rowspan="3">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>09.03.26</td><td>09.03.26</td></tr>
<tr><td>PW2</td><td>09.03.26</td><td>09.03.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused U/s. 313(1)(b) Cr.P.C</td><td colspan="3">12.03.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">இறுதியாக, 1, 2 எதிரிகளுக்கு எதிரான சட்டப்பிரிவுகள் 52(A) r/w 68(A) of Copyright Act and 506(i) IPC–</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி, 1, 2 எதிரிகளை சட்டப்பிரிவு 52(A) r/w 68(A) of Copyright Act and 506(i) IPC–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச பிரிவு 248(1) கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | Property order passed. |

இவ்வழக்கு 26.02.2015ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.128/2015 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.K.அன்புச்செழியன், B.A., B.L. அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

### I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 14.12.2014ம் தேதி 19.30 மணியளவில் திண்டுக்கல் சரவண பவன் ஹோட்டல் எதிரில் இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் புதுப்படமான லிங்கா படத்தின் கேசட்டுகளை எவ்வித அனுமதியும் பெறாமல் ஒரு கேசட்டு ரூ.40/-க்கு விற்க 13 கேசட்டுகளை வைத்திருந்ததாகவும், எதிரிகளிடம் இவ்வழக்கின் வாதி நான் இந்த ஏரியா டிஸ்ட்ரிப்யூட்டர், இப்படி விற்கலாமா என்று கேட்டபோது, எதிரிகள் வாதியைப் பார்த்து டேய் ஓடிப் போயிரு இல்லைனா கொன்றுவிடுவோம் என கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 52(A) r/w 68(A) of Copyright Act and 506(i) of IPCன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பால் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### II. வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு குறித்து வினவுதல்:

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிகளுக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து எதிரிகளுக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பானை அனுப்பி அவர்கள் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் 30.03.2015ம் நாளன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 52(A) r/w 68(A) of Copyright Act and 506(i) IPC-ன் கீழான

குற்றச்சாட்டின் சாராம்சத்தை விளக்கிக்கூறியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்ததால் எதிரிகளுக்கு எதிராக பிரிவுகள் 52(A) r/w 68(A) of Copyright Act and 506(i) IPC–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது எதிரிகள் குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**III) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

3. அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, சா.பொ.1 முதல் சா.பொ.2 வரையிலான சான்றுபொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இவ்வழக்கின் சம்பவம் பற்றி அத்தாட்சி சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு திண்டுக்கல்லில் உள்ள தனது சித்தப்பா வீட்டிற்கு வந்துவிட்டு மீண்டும் மதுரை செல்வதற்காக திண்டுக்கல் பேருந்து நிறுத்தத்திற்கு வந்தபோது போலிசார் புதுப்பட CDக்கள் விற்பனை செய்ததற்காக ஒருவரை கைது செய்ததாகவும், அதற்காக அத்தாட்சியில் சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி தனது நீதிமன்ற சாட்சியத்தில், வழக்கின் புலன் விசாரணை அலுவலர் சார்பு ஆய்வாளர் பக்தவச்சலம் பதிவு உயர்வு பெற்று வெளிமாவட்டம் சென்றுவிட்டதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 14.12.20014ம் தேதி வாதி நிலையம் சி.டி. உடன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாகவும், வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சரவணபவன் ஹோட்டல் எதிரே கண்காணிப்பில் ஈடுபட்டபோது இரண்டு நபர்கள் கையில் பையுடன் இருந்தவர்களை விசாரிக்க சுயலாபத்திற்காக புதுப்பட சிடிக்கள் விற்பதாக தெரிவித்ததாகவும், அதனால் எதிரிகளை கைது செய்து வழக்குச்சொத்துக்களை சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், எதிரிகளை பராவசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், வழக்குச் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து RPR No.5/2015 ஆக பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சா.பொ.1 முதல் சா.பொ.2 வரையிலான சான்றுபொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**V.எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்**

7. அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணை முடிவடைந்ததும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து

எதிரிகளுக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்களைப் பற்றி எதிரிகளிடம் குவிமுச 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவியபோது எதிரிகள் அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், அரசு தரப்பில் பொய் வழக்கு போட்டுள்ளதாகவும் கூறினர். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எதுவும் இல்லை என்று கூறினர்.

8. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள், சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**V. வாதுரைகள்:**

**1. அரசுத்தரப்பு வாதம்:**

9. இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, சா.பொ.1 முதல் சா.பொ.2 வரையிலான சான்றுபொருட்கள் குறியீடு செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமும், ஆவணங்களின் அடிப்படையிலும், எதிரிகள் மீதான சட்டப் பிரிவுகள் 52(A) r/w 68(A) of Copyright Act and 506(i) IPC−ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்கப்படவேண்டும் என அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

**2. எதிரி தரப்பு வாதம்:**

10. இதற்கு மாறாக எதிரிகளின் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், தனது வாதுரையில் எதிரிகள் மீது அரசு தரப்பில்

சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றும், அத்தாட்சி சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 வெள்ளைதாளில் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

## VI. ஆய்விற்குரிய பிரச்சனை

11. இருதரப்பு வாதத்தின் அடிப்படையிலும், வழக்கு கோப்பை பரிசீலனை செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில், எதிரிகள் மீதான சட்டப் பிரிவுகள் 52(A) r/w 68(A) of Copyright Act and 506(i) IPC–ன் படியான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சாட்சிகள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

## VII. தீர்வு:–

12. அரசு தரப்பானது, கடந்த 14.12.2014ம் தேதி 19.30 மணியளவில் திண்டுக்கல் சரவண பவன் ஹோட்டல் எதிரில் இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் புதுப்படமான லிங்கா படத்தின் கேசட்டுகளை எவ்வித அனுமதியும் பெறாமல் ஒரு கேசட்டு ரூ.40/–க்கு விற்க 13 கேசட்டுகளை வைத்திருந்ததாகவும், எதிரிகளிடம் இவ்வழக்கின் வாதி நான் இந்த ஏரியா டிஸ்ட்ரிப்யூட்டர், இப்படி விற்கலாமா என்று கேட்டபோது, எதிரிகள் வாதியைப் பார்த்து டேய் ஓடிப் போயிரு இல்லைனா கொன்றுவிடுவோம்

என கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 52(A) r/w 68(A) of Copyright Act and 506(i) of IPCன் கீழ் குற்றம் சாட்டியுள்ளது.

13. மேற்சொன்ன குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்ப்பதற்கு முன்பாக குற்றச்சாட்டின் சாரம்சத்தை பார்க்க வேண்டும். பதிப்புரிமைச் சட்டத்தின் பிரிவு 52Aன் கீழ் ஒலிப்பதிவு மற்றும் ஒளிப்பதிவு படங்களை வெளியிடுவது பதிப்புரிமை மீறலை உள்ளடக்கியது ஆகும். இந்த சட்டத்தின்படி, பதிப்புரிமை உரிமையாளரின் அனுமதியின்றி ஒரு ஒலிப்பதிவு அல்லது ஒளிப்பதிவு படத்தை வெளியிடுவது குற்றமாகும்.

14. மேற்சொன்னவாறு குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்ட புகாரைப் பரிசீலனை செய்யும்போது, "இந்த படத்தை நான் தான் எடுத்திருக்கிறேன். நீங்க இப்படி திருட்டு VCD வித்தால் எங்களுக்கு எவ்வளவு நஷ்டம் வரும் என்று கேட்டேன் அதற்கு பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த சின்னு என்பவரும் அவருடன் இருந்த கோபாலகிருஷ்ணன் என்பவரும் என்னைப் பார்த்து டேய் ஒழுங்கா ஓடிப் போயிரு இல்லைனா கொன்றுவோம்" என்று மிரட்டியதாக புகார் அளித்துள்ளார். மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையைப் பரிசீலனை செய்யும்போதும் மேற்சொன்ன சங்கதிகள் இடம் பெற்றுள்ளன.

15. முதலாவதாக எதிரிகளிடமிருந்து தான் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள CDக்கள் கைப்பற்றப்பட்டதா? என்று அரசு தரப்பால்

நிரூபிக்கப்பட்டுள்ளதா பார்க்கும்போது, இவ்வழக்கில் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட அத்தாட்சியைப் பரிசீலயை செய்யும்போது, 12 லிங்கா புதுப்பட கேசட்டுகள் சாட்சிகள் பழனியப்பன், கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. அத்தாட்சி சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது முதல் விசாரணையில் இதனை உறுதிபடுத்தும் விதமாக "புதுப்பட சிடிக்கள் விற்பனை செய்ததற்காக ஒருவரை கைது செய்ததாகவும் அதற்காக அத்தாட்சியில் சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அவர் தனது குறுக்கு விசாரணையில் "எழுதாத வெள்ளை தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கைப் பற்றி எனக்கு ஏதும் தெரியாது என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளபோது மேற்படி எதிரிகளிடமிருந்து தான் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதா என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுந்துள்ளது. மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரிகள் குற்றச் செயலில் ஈடுபட்டார்கள் என்று கருத இயலாது.

16. மேலும், இவ்வழக்கில் முக்கிய அகக்கூறான மேற்படி கைப்பற்றப்பட்ட சீடிக்களிலிருந்து திரைப்படங்களை அவற்றின் உரிமையாளர்களின் அனுமதியின்றி எதிரிகள் சுயலாபம் கருதி விற்பனை செய்வதற்காக வைத்திருந்தார்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். ஆனால், இவ்வழக்கில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட CDக்களை ஆய்விற்கோ அல்லது அதில் என்ன பதிவு உள்ளது என்று பரிசோதனை செய்யவும் இல்லை. ஆகவே, அரசு தரப்பால் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட CDக்களை ஆய்வுக்கு உட்படுத்தாமல் அதில் என்ன பதிவு உள்ளது என்று

பரிசோதனை செய்யாமல் பதிப்புரிமை சட்டத்தை 1, 2 எதிரிகள் மீறினார்கள் என்று கருத இயலாது.

17. இரண்டாவதாக, எதிரிகள் மீதான இதச சட்டப்பிரிவு506(i)ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்ட புகாரைப் பரிசீலனை செய்யும்போது, "இந்த படத்தை நான் தான் எடுத்திருக்கிறேன். நீங்க இப்படி திருட்டு VCD வித்தால் எங்களுக்கு எவ்வளவு நஷ்டம் வரும் என்று கேட்டேன் அதற்கு பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த சின்னு என்பவரும் அவருடன் இருந்த கோபாலகிருஷ்ணன் என்பவரும் என்னைப் பார்த்து டேய் ஒழுங்கா ஓடிப் போயிரு இல்லைனா கொன்றுவோம்" என கொலைமிரட்டல் விடுத்ததாக புகார் அளித்துள்ளார். ஆனால், இவ்வழக்கின் புகார்தாரர் அரசு தரப்பில் சாட்சியை தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை என்று விலக்களிக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட மற்ற சாட்சிகளும் எதிரிகள் புகார்தாரரைப் பார்த்து கொலைமிரட்டல் விடுத்ததாக எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை.

18. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்ட பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றைப் பரிசீலனை செய்யும்போது, சம்பவ இடமானது பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதி என்று தெரிய வருகிறது. ஆனால் இவ்வழக்கில் வேறு கண்ணுற்ற சாட்சிகளோ அல்லது தனிநபர் சாட்சிகளோ சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்டு அரசு தரப்பு வழக்கிற்கு உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை.

19. ஆகவே, 1, 2 எதிரிகள் சுயலாபத்திற்காக பதிப்புரிமை இல்லாமல் CDக்களை விற்பனை செய்து பதிப்புரிமை மீறல் செய்தார்கள் என்றும், புகார்தாரரைப் பார்த்து கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று அரசு தரப்பால் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. இறுதியாக, 1, 2 எதிரிகளுக்கு எதிரான சட்டப்பிரிவுகள் 52(A) r/w 68(A) of Copyright Act and 506(i) IPC–ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி, 1, 2 எதிரிகளை சட்டப்பிரிவு 52(A) r/w 68(A) of Copyright Act and 506(i) IPC–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச பிரிவு 248(1) கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

21. இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

22. இவ்வழக்கில் RPR No.5/2015ல் முன்னிறுத்தப்பட்ட வழக்குச் சொத்துக்களான வரிசை எண்.1 மற்றும் 2 ல் உள்ள லிங்கா படத்தின் 13 CDக்களை மேல்முறையீட்டு காலத்திற்குப் பிறகு அழித்திட உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் நாள் திங்கட்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.03.23 16:33:14 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | பழனியப்பன் த/பெ.சிங்காரம் | 08.03.26 | அ.சா.ஆ.1 |
| 2. | அ.சா.2 | சரத்குமார் (சார்பு ஆய்வாளர் ) | 09.03.26 | அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.8 சா.பொ.1 சா.பொ.2 |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 14.12.2014 | அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.2 | 14.12.2014 | முதல் தகவல் அறிக்கை |
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.2 | 14.12.2014 | பார்வை மகஜர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.2 | 14.12.2014 | மாதிரி வரைபடம் |
| 5. | அ.சா.ஆ.5 | அ.சா.2 | 14.12.2014 | 14.12.2014 ம் தேதி 22.15 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி |
| 6. | அ.சா.ஆ.6 | அ.சா.2 | 14.12.2014 | படிவம் 91 |
| 7. | அ.சா.ஆ.7 | அ.சா.2 | 14.12.2014 | அத்தாட்சி |
| 8. | அ.சா.ஆ.8 | அ.சா.2 | 14.12.2014 | புகார் |

**III. அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்** – சா.பொ.1 (12 CD )
சா.பொ.2 ( 1 CD)

**IV. எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்** – இல்லை

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.23 16:33:20 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
திண்டுக்கல்.

**குறிப்பு:**

1. வழக்கின் முடிவு எதிரிகளுக்கும் / காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.
3. எந்த சாட்சிகளும் 3 முறைக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.